**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.217/2022**
**Prosecution Witness – PW.10**

| | |
|---|---|
| Name | :திருமதி. ராணி |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

(Accused is present.)

முதல் விசாரணை–

நான் தற்சமயம் உடையார் விளையில் குடியிருந்து வருகிறேன். நான் வீட்டில் இருக்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 03.08.2010 அன்று மதியம் 3.30 மணியளவில் கள்ளன் கள்ளன் என்ற அலறல் சப்தம் கேட்டது. நான் ஓடி சென்று பார்த்த போது சந்திரன் அண்ணன் வீட்டிற்கு பின் பக்கம் 2 கள்ளமார்கள் சென்றதை கண்ட சந்திரன் அண்ணன், மணி அண்ணன், நெல்சன் அண்ணன் நாங்கள் எல்லோரும் சேர்ந்து அவனை கள்ளன் கள்ளன் என்று சொல்லி பிடித்து வைத்திருந்தோம். அவர் ஆஜர் எதிரியா என்றால், பகவதி அப்பன் இருக்கிறார். தற்பொழுது நீதிமன்றத்தில் ரமேஷ் இல்லை. அவர்களை பிடித்து வைத்து கறுப்பு, நீலம், சிகப்பு வண்ணம் கொண்ட கர்ச்சீப்பால் முகத்தை மறைத்து கொண்டார்கள். அதன் பிறகு போலீஸ் வந்தது. அவர்களுடைய விபரங்களை கேட்டு எழுதி சென்றார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் துணி நான் ஏற்கனவே சொன்ன துணி இருக்கிறதா என்றால், ஆமாம். மேற்படி பொருளை சாட்சியம் மூலம் குறியீடு செய்ய இயலாது என்று எதிரி தரப்பில் ஆட்சேயபனை செய்யப்பட்டது. ஆட்சேயபனை பதிவு செய்யப்பட்டு அது சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

நான் பகவதி அப்பன் என்று பெயர் சொன்னதை சந்திரா அண்ணன் தான் அந்த பெயரை சொல்லி தந்தார் என்றால், ஆமாம். சந்திரன் பெமிலா

நான் பகவதி அப்பன் என்று பெயர் சொன்னதை சந்திரா அண்ணன் தான் அந்த பெயரை சொல்லிக் கொடுத்தார் என்றால் ஆமாம். சந்திரன் என்பவருக்கு ஒரு மகள் இருக்கிறார் என்றால், ஆமாம். அவர் பெயர்

பெமிலா என்றால், ஆமாம். சம்பவம் நடந்த காலகட்டத்தில் அந்த பெமிலா திருச்சியில் படித்துக் கொண்டிருந்தார் என்றால் ஆமாம். பெமிலாவும் பகவதி அப்பனும் காதலித்த விவரம் தெரியுமா என்றால், தெரியாது. பெமிலாவும் பகவதி அப்பனும் காதலித்து வந்தார்கள் என்றாலும், நான் சந்திரனுக்காக பொய்யாக தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இல்லை. எங்களுடைய உறவினர் தக்கலையில் இருந்தார். அவர் தான் முதலில் விசாரித்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படுகின்ற தேதியில் சந்திராவிற்கும் அவருடைய மகளுக்கும் பிரச்சனை நடந்தது என்றால், தெரியாது. நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கும் சம்பந்தம் இல்லை என்றால், சரியல்ல. என் மூலமாக குறியீடு செய்யப்பட்ட சான்று பொருள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், அந்த சான்று பொருளுக்கும் இந்த வழக்குக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், இல்லை. சந்திரா கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர் என்பதாலும், எதிரி இந்து மதத்தை சார்ந்தவர் என்பதாலும் எதிரிக்கும் சந்திராவின் மகளுக்கும் உள்ள காதல் பிடிக்கததால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இல்லை.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.217/2022**
**Prosecution Witness – PW.11**

| | |
|---|---|
| Name | : திரு. மணிவண்ணன் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

(Accused is present.)

முதல் விசாரணை–

நான் தற்சமயம் விழுந்தயம்பலத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்னால், கோணங்காட்டு பக்கம் இலட்சுமி புரத்தில் வசித்து வந்தேன். கடந்த 03.08.2010 அன்று மாலை 6.00 மணியளவில் குளச்சல் ஆய்வளார் வந்து சம்பவ நடந்த இடத்தை எல்லாம் பார்வையிட்டு அந்த இடத்தில் படம் வரைந்தார். என்னிடமும் என் மனைவியிடமும் விசாரித்தார்கள். என்னிடத்தில் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள். என்னிடம் 2 பேப்பரில் 2 கையெழுத்து வாங்கினார்கள். தற்சமயம் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜர் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸ் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கிவிட்டு ஒரு கால் மணி நேரத்தில் கிளம்பி விட்டார்களா என்றால், 20 நிமிடங்கள் இருக்கும் கிளம்பி விட்டார்கள். கல்லுக் கூட்டத்திலிருந்து குளச்சல் செல்லும் வழியில் வலப்புறமாக செல்லும்போது அரை கிலோமீட்டர் தூரத்தில் தேன்பிறவிளை இருக்கும் என்றால், ஆமாம். அந்த ரோட்டை தேன்பிறவிளை ரோடு என்று தான் சொல்வார்கள் என்றால் ஆமாம். உடையார்விளையில் இருந்து மண்டைக்காடு செல்லும் வழியில் இருக்கிற சந்திப்பு தான் லட்சுமிபுரம் என்றால், ஆமாம். இரண்டு கையெழுத்து போட்ட ஆவணங்களில் என்ன எழுதி இருந்தது என்று படித்தேனா என்றால், படித்தேன். என்ன எழுதி

இருந்தது என்றால், சம்பவம் நடந்ததை பற்றி எழுதியிருந்தது. இரண்டு ஆவணங்களிலும் சம்பவத்தை பற்றி தான் எழுதியிருந்தது என்றால், ஆமாம். புகார்தாரர் எனக்கு தெரிந்த நபர் என்றால் என்னுடைய மனைவி வீட்டுக்கும் பக்கத்து வீட்டை சார்ந்தவர். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தான் இரண்டு ஆவணங்களிலும் கையெழுத்து போட்டேன் என்றால், சரியல்ல. நான் டாஸ்மாக் நிறுவனத்தில் 4.30 மணிக்கு வேலையை முடித்துவிட்டு வீட்டுக்குவந்தேன் வந்த பிறகு வீட்டில் குளித்துவிட்டு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் பொழுது போலீஸ் வந்தார்கள் போலீஸ் வந்த பிறகுதான் அந்த இடத்துக்கு சென்று ஆவணத்தில் கையெழுத்து போட்டேன். போலீஸ் விசாரணையில் மேற்படி விவரத்தை சொல்லி இருக்கிறேன் என்றால் ஆமாம். நான் புகார்தாரருக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் வைத்து ஆவணங்களில் கையெழுத்து போடவில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**